களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

eISSN: 2456-5148
Vol. 4 Issue: 03 August 2025
https://doi.org/10.63300/kirjts04032025

# Depiction of society in Vairamuthu's Poems

**Dr. G. Jeyajothi,**
Assistant Professor, Department of Tamil, Sona College of Arts and Science, Salem – 05.
Email: gjjothi76@gmail.com

**Abstract:**

Literature of a given period intrinsically reflects the ethos and events that occur in human life, justifying the enduring assertion by scholars that literature is fundamentally the mirror of time itself. Just as the careful arrangement of pleasing and evocative scenes adds undeniable pride and depth to the art of painting, and those harmonious melodies pleasing to the ear are the very fertile seeds of music, so too does literature function as the ultimate, sophisticated treat for intellectual thought. It is the vital medium that infuses ordinary writings with profound specialness and lasting cultural resonance. The ultimate and inexhaustible source of all true literature remains the vast, complex tapestry of human life—its profound joys, its crushing conflicts, and its persistent, silent struggles against fate. A literary creator acts not merely as a passive chronicler but as a sophisticated artistic sieve; whatever reality is absorbed deeply into the artist's mind and sensitive soul inevitably evolves, transforming raw, lived experience into refined, accessible works. This transformation elevates mere observation into powerful social commentary, offering deep insight where history often only provides facts. Great writers distill the true essence of an era. In the contemporary Tamil literary landscape, few embody this crucial critical function as powerfully and pervasively as the renowned National Award-winning poet Vairamuthu. This article, therefore, meticulously explores how Kaviperarasu Vairamuthu expertly portrays the nuanced complexities and shifting dynamics of modern society specifically through the potent medium of his lyrical and evocative poems.

**Keywords**: *Culture, Civilisation, Traditions, Problems of society, Philosophy.*

**References**

1. Gnanamurthy, T. A. (1996). *Ilakkiya Thiranayviyal* [Literary Criticism]. Aindhinai Pathippagam.
2. Jeevanandam, P. (1992). *Ilakkiya Suvai* [Literary Taste] (3rd ed.). New Century Book House (Pvt. Ltd.).
3. Loganathan, P. (1998). *Vairamuthu Kavithaigal* [Vairamuthu's Poems]. Pudhukavithai Aaraaychi.
4. *Sirpiye Unnai Sedhukkugiren* [Sculptor, I Carve You] (10th ed.). (2004). Surya Veliyeedu.
5. *Sikarangalai Nokki* [Towards the Peaks] (10th ed.). (2004). Surya Veliyeedu.
6. *Idhuvarai Naan* [Until Now, Me] (2nd ed.). (1984). Bharathi Pathippagam.

**Author Contribution Statement**: NIL.
**Author Acknowledgement**: NIL.
**Author Declaration**: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

**License**

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

KALANJIYAM

# வைரமுத்து கவிதைகளில் சமுதாய சித்தரிப்பு

**முனைவர் கோ. ஜெயஜோதி**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி – சேலம் -636 005

Email: dr.sabhira.kmc@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

இலக்கியம் என்பது காலங்களைக் கடந்து பயணிக்கும் ஒரு சமுதாயக் கண்ணாடி. மனித வாழ்வில் அன்றாடம் நிகழும் எண்ணற்ற நிகழ்வுகளையும், சமூகத்தின் உட்கூறுகளையும், கால மாற்றத்தால் உண்டான தத்துவப் புரட்சிகளையும் அந்தந்தக் கால இலக்கியங்களே மிகத் துல்லியமாகப் பிரதிபலிக்கின்றன. அதனால்தான், இலக்கியங்களைப் 'பண்பாட்டின் பெட்டகம்' என்றும் 'காலக் கண்ணாடி' என்றும் சான்றோர்கள் போற்றுகின்றனர். கண்களுக்கு இனிய காட்சிகள் ஓவியக் கலைக்குப் பெருமை சேர்ப்பது போலவும், காதுகளுக்கு இன்பம் சேர்க்கும் ஓசைகளும் ராகங்களும் இசைக் கலைக்கு வித்தாவது போலவும், ஆழ்ந்த சிந்தனைகளுக்கு விருந்தாய் அமைவது எழுத்துக் கலையான இலக்கியமே ஆகும். எண்ணங்களை அடுக்கி, அவற்றைத் தத்துவமாக்கி, சமூகத்தின் உயிர்த்துடிப்பை ஆவணப்படுத்துவதே இதன் தலையாய கடமையாகும். ஒட்டுமொத்த இலக்கியப் படைப்புகளுக்கும் அடிநாதமாகத் திகழ்வது மனித வாழ்க்கையும் அதன் பன்முகப் பரிமாணங்களுமேயாகும். காரணம், ஒரு படைப்பாளியின் மனதில் எவை உணர்வுகளாக உள்வாங்கப்படுகின்றனவோ, அந்த உணர்வுகளின் பிரதிபலிப்பே எழுத்து வடிவத்தில் அவரது படைப்புகளாகப் பரிணமிக்கின்றன. அவ்வகையில், தமிழ் இலக்கியக் களத்தில் தனக்கென ஒரு தனி முத்திரையைப் பதித்த கவிப்பேரரசு வைரமுத்து அவர்களின் கவிதைகள், வெறும் உணர்ச்சிப் பெருக்கு மட்டுமல்லாமல், ஆழமான சமூகச் சித்திரங்களைத் தாங்கி நிற்கின்றன. அவருடைய எழுத்துக்கள் கிராமிய வாழ்வின் எளிமை முதற்கொண்டு, நகர்ப்புறச் சிக்கல்கள், அரசியல் நிலைப்பாடுகள், சாதிய முரண்கள், பெண்ணிய விடுதலைக்கான குரல், மற்றும் ஏழை எளிய மக்களின் அன்றாடப் போராட்டங்கள் ஆகியவற்றைப் பொதிந்துள்ளன. காலத்தின் மாற்றத்திற்கேற்ப தனது கவிதை அமைப்பை வடிவமைக்கும் திறனும், எளிய சொற்களில் ஆழமான சமூகக் கருத்துக்களை விதைக்கும் ஆற்றலும் அவருக்கு உண்டு. சமுதாயத்தின் முற்போக்குச் சிந்தனைகளையும், பிற்போக்குத்தனமான நடைமுறைகளையும் ஒரே நேரத்தில் விமர்சனப் பார்வையுடன் அவர் சுட்டிக்காட்டுகிறார். எனவே, வைரமுத்துவின் கவிதைப் படைப்புகள் வழி, அவர் சித்தரிக்கும் சமுதாயத்தின் பன்முகத் தன்மைகள், மாற்றங்கள் மற்றும் போராட்டங்கள் ஆகியவை எத்தகைய வடிவங்களில் வெளிப்படுகின்றன என்பதை இக்கட்டுரை விரிவாக ஆராய்ந்து ஆய்வு முடிவுகளை முன்வைக்கிறது.

***திறவுச்சொற்கள்:*** பண்பாடு, நாகரிகம், மரபுகள், சமுதாயத்தின் சிக்கல்கள், தத்துவம்.

**முன்னுரை:**

மனித வாழ்வில் ஏற்படும் நிகழ்வுகளை அந்தந்த கால இலக்கியங்கள் பிரதிபலிக்கின்றன. அதனால்தான் இலக்கியங்களை கால கண்ணாடி என்று சான்றோர்கள் கூறுகின்றனர் . கண்ணுக்கு இனிய காட்சிகள் ஓவியக்கலைக்குப் பெருமை சேர்க்கின்றன. காதுக்கு இனிய ராகங்கள் இசைக்கு வித்தாகின்றன. சிந்தனைக்கு விருந்தாக இலக்கியங்கள் எழுத்துக்களுக்கு சிறப்பு சேர்க்கின்றன. இலக்கியத்திற்கு ஆதாரம் மனித வாழ்க்கையாகும். ஓர் இலக்கிய படைப்பாளியின் மனதில் எவை உள்வாங்கப்படுகின்றதோ, அவை அவரது படைப்புகளாக பரிணமிக்கின்றன. அவ்வகையில் வைரமுத்து அவர்களின் கவிதைகள் வழி சமுதாய சித்தரிப்பை காணலாம்.

**ஆய்வு நோக்கம்**

கலைக்கலைக்காகவே என்றில்லாமல் கலை மக்களுக்காகவே என்ற குறிக்கோளில் வைரமுத்து இலக்கியம் படைத்துக் கொண்டிருப்பவர். எனவே சமூகம் பற்றிய சிந்தனைகள் அவர்

KALANJIYAM

படைப்புகளில் பல்வேறு கோணங்களில் வெளிப்படுகின்றன. அவ்வகையில் இலக்கிய நோக்கோடு படைத்த கவிதைகளில் சமுதாய சிந்தனைகள் பற்றி ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கம்.

**கலைக்கலைக்காகவே**

மானுட வரலாற்றின் எழுத்து பூர்வ ஆவணமாக திகழும் இலக்கியங்கள் அழகியல் சார்ந்த நிகழ்வுகளை மட்டுமே படைத்து வரும் காலங்கள் முடிவடைந்து இன்று சமுதாயத்தில் உள்ள அனைத்து நிலைகளையும் ஆராயத் தொடங்கியுள்ளது .

**"கவிதை ஒவ்வொரு நிலையிலும் நம்மை வாழ்க்கையோடு தொடர்பு படுத்தி நம் உள்ளம் முழுவதையும் கவர்ந்து உலகின் அழகையும் உண்மை பொருளையும் உணரச் செய்கிறது. கவிதை ஒரு கலையாகையால் கலைநுட்பம் நோக்கிலும் அதனை மதிப்பிடுதல் வேண்டும். அதே சமயத்தில் கவிதை, கலை, ஆன்மீக உணர்வு, கருத்து ஆகியவற்றின் வடிவமே என்பதையும் இவற்றை விளக்கும் திறனை ஒட்டியே அதன் முழுமையான மதிப்பு அமைந்துள்ளது என்பதையும் நினைவில் கொள்ளுதல் வேண்டும்"**(தா.ஏ ஞானமூர்த்தி, இலக்கிய திறனாய்வியல், ப .240) என்று தா.ஏ.ஞானமூர்த்தி குறிப்பிடுகின்றார்.

**இலக்கியங்களில் சமுதாயம்**

சமுதாயம் என்பது பல்வேறுபட்ட குழுவினரும் ஒத்த கருத்துடன் இணைந்து வாழும் தொகுதி ஆகும். மனிதர்கள் மரபு, குணநலன்கள், விருப்பு, வெறுப்பு போன்றவற்றில் ஒத்த நிலையை பெற்றவர்களாகவும் கூடி வாழ்தல் என்ற பண்பில் வழியாக ஒருங்கிணைந்த வாழ்க்கை முறையை பெற்றவர்களாகவும் விளங்குகின்றனர். இதன் வழி சமுதாய அமைப்பு உருவாக்கம் பெற்றது. சமுதாயத்தில் ஒத்த கருத்து ஏற்படவும் மனிதர்கள் தங்களுக்குள் பரிமாற்றம் நிகழ்த்தி, ஒருங்கிணைந்து வாழவும் மொழி இன்றியமையாதாகிறது.

ஒரு சமுதாயத்தின் பண்பாடு, நாகரிகம், மரபுகள் போன்றவற்றை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் பண்பாகவும் நிகழ்காலத்தில் பதிய வைக்கும் பண்பாகவும் இலக்கியங்கள் அமைகின்றன. இவ்விலக்கியம் என்பது மொழியின் ஆளுமையோடு சமுதாயத்தின் இயக்கங்களாகவும் இயங்குகின்றன. சமுதாயத்தின் அடையாளங்களை பதிய வைக்கும் பெரும் பொறுப்பு இலக்கியத்திற்கு உண்டு. எனவே இலக்கியங்கள் சமுதாய நோக்குடன் காணத்தக்கணவாகின்றன. வெற்றி பெற்ற படைப்பு என்பது சமுதாயத்தின் சிக்கல்களை வெளிப்படுத்துவதுடன் அதற்கான தீர்வுகளை அளிக்க கூடியதாகும் அமைய வேண்டும். இத்தகைய சிக்கல்களை தீர்க்கும் பண்புடைய படைப்புகளின் மூலம் சமுதாயம் பெரும் நன்மையை பெற இயலும். அவ்வகையில் சமுதாயத்தின் வெளிப்பாடாகவும் சமுதாயத்தை வெளிப்படுத்துவதாகவும் வைரமுத்துவின் கவிதை இலக்கியம் சமுதாயத்துடன் நெருங்கிய தொடர்புடையதாக இருக்கின்றது.

கவிதையின் முக்கிய கூறுகளுள் ஒன்று அது வெளிப்படுத்தும் ஆற்றல் மக்களின் பெரும்பாலோனோர் கவிதை உணர்வினை மிக சிறிதள வேணும் பெற்று இருப்பர். ஆனால் அவர்களின் அன்றாட வாழ்க்கை நிலையினால் கவிதையை சுவைக்கும் திறன் சிதைக்கப்படுகிறது. ஒவ்வொரு சிறந்த கவிஞரும் உலகின் விந்தைகளையும் உண்மைகளையும் அழகியலையும் நமக்கு உணர்த்தும் திறன் வாய்ந்தவர்கள். இதனை கலைக்கலைக்காகவே என்ற கொள்கை உடையவர் சிலர் உள்ளனர். உலகின் பெரும் கவிஞர்களும் திறனாய்வாளர்களும் அதை ஏற்கவில்லை. கவிதை வாழ்க்கையில் இருந்து உருவாக்கப்பட்டது. அது வாழ்க்கை கூறியது என்றும் வாழ்க்கைக்காகவே அது நிறைவேற்று வருகிறது என்றும் அப்பேரறிஞர்கள் கருதுகின்றனர். தம் வாழ்க்கையின் உண்மைப் பொருளை நன்குணர்ந்து

அதனை விளக்கும் தம் ஆற்றலை ஒட்டியே கவிஞர்கள் பெரும் புகழ் எய்துகின்றார்கள் என்று தா.ஏ ஞானமூர்த்தி(பக்-240) கலை வாழ்க்கைக்காகவே என உணர்த்துகிறார்.

**தத்துவம்:**

மனித வாழ்வில் எத்தனையோ தத்துவங்கள் மறைந்து கிடக்கின்றன. பிறந்தது முதல் மறைவது வரை வாழ்க்கை அனைத்தும் தத்துவங்களால் நிரப்பப்படுகின்றன. தத்துவம் என்பது எங்கிருந்தோ வந்து தோன்றுவது இல்லை. வாழ்வின் அனுபவங்களில் இருந்து பிறப்பதாகும்.

ஒரு மனிதனுக்கு ஏக்கம், கவலை, வெறுப்பு தோன்றும்போது தத்துவமும் பிறக்கிறது. அது மட்டும் இன்றி கடவுள் பிறப்பு, இறப்பு என்ற நிலையில் பாடும் போதும் தத்துவம் உருவாகின்றது.

"உலகத்தில் மாறாது இருப்பது மாற்றம் ஒன்றுதான் என்பது தத்துவம். தத்துவங்களுக்கு எல்லாம் தலைமை தாங்கும் தத்துவம்"(வைரமுத்து எல்லா நதியிலும் என் ஓடம் முன்னுரை)

என்ற வரிகளில் வைரமுத்து தத்துவத்தை பற்றி கூறியுள்ளதை காண முடிகின்றது. வாழ்க்கையில் பாதீ நாட்கள் துக்கத்திலும் மீதீ நாட்கள் தூக்கத்திலும் ஏக்கத்திலுமே கடந்து போய்க் கொண்டிருப்பதை

**"தூக்கம் கொண்டது கால்வாசி - நாம்**
**துக்கம் கொண்டது கால்வாசி**
**ஏக்கம் கொண்டது கால்வாசி - இதில்**
**இருக்கும் காலம் கால்வாசி''**

(வைரமுத்து சிகரங்களை நோக்கி ப.39) என்னும் கவிதை வரிகளில் வைரமுத்து எடுத்துரைப்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

வாழ்க்கையில் உண்மைகளை அனுபவத் தெளிவுகளை ஒருவர் மற்றவருக்கு எடுத்துரைப்பது தத்துவம்.உலகத்தில் எளிதில் கிடைக்கப் பெறாத ஒன்று தூக்கம் ஒரு முறை கலைத்து விட்டால் மீண்டும் கட்ட முடியாத குருவிக்கூடு போன்றது என்பது வைரமுத்துவின்

**''தூக்கம் என்பது**
**தூக்கணாங் குருவிக்கூடு**
**யாரும் கலைக்கலாம்**
**எவரும் கட்டிவிட முடியாது''**

(வைரமுத்து, இந்த பூக்கள் விற்பனைக்கு அல்ல, ப.109 )என்ற வரிகள் மூலம் தெரிந்துகொள்ள முடிகிறது.

மனித வாழ்க்கையில் தத்துவம் அன்றாட மனித வாழ்வில் அனுபவிக்கும் துன்பங்களும் அவற்றை தீர்த்துக் கொள்ள மேற்கொள்ளப்படும் முயற்சிகளும் சில காலத்தில் ஆறுதல் பெறுவதற்கு கூடிய வாழ்க்கை உண்மைகளை தத்துவமாக அமைகின்றன. மனிதன் தனது இதயத்தில் ஏற்படுகின்ற ஆசைகளை எல்லாம் நிறைவேற்றவே வாழ்க்கையோடு போராடிக் கொண்டிருக்கின்றான். அப்படி வாழக்கூடிய வாழ்க்கையில் நிமிடங்களை கூட பயனுள்ளதாக மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதை,

**'' இதயத்தில் என்னென்ன வேட்கை- இது**
**இடைவேளை இல்லாத வாழ்க்கை**
**வாழ்க்கையோடு போராட்டம் இங்கே இதில்**
**வாழ்கின்ற நிமிடங்கள் எங்கே?"** (வைரமுத்து சிகரங்களை நோக்கி ப.12) என்ற வரிகள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

காதல் தத்துவம் இளமை பருவத்தில் ஏற்படுகின்ற காதலை காட்டிலும் முதுமை பருவத்தில் ஏற்படக்கூடிய காதலில் அதிகமான அன்பு நிறைந்திருக்கும் என்பதை வலியுறுத்தும் வகையில் முதுமை காதலை இளைஞர்களுக்கு அறிவுறுத்தும் விதமாக கூறியதையும்,

**"கிழவனும், மூத்திருக்கும்**
**கிழவியும் மட்டு மிங்கே**
**களங்கமே இல்லா - தூய**
**காதலைச் செய்திடட்டும்**
**இளைஞரே! நாம் செய்கின்ற**
**இழிசெயல் காதலல்ல;**
**அளப்பவன் இல்லை; நன்றாய்**
**அளந்தவன் சொல்லி விட்டேன்''**

(கண்ணதாசன், அந்தி- சந்தி அர்த்த ஜாமம், ப -95,96) என்ற வரிகள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

**தொகுப்புரை**

வாழ்க்கை இன்பமும் துன்பமும் நிறைந்தது. நிலையில்லாத உலகிலேயே இன்பத்தையும் துன்பத்தையும் ஏற்று வாழ பழகிக்கொள்ள மனவலிமை தேவைப்படுகிறது. அதனால் இன்ப துன்பங்களை சமமாக கருதும் மனவலிமை மனிதர்கள் பெற வேண்டும் என்று வைரமுத்து அறிவுறுத்துவதை உணர்ந்து கொள்ள முடிகின்றது. இறப்பின் தத்துவத்தைக் கூற விளையும் வைரமுத்து உலகியல் வாழ்க்கையே ஒரு தத்துவமாக உள்ளது என்று எடுத்துக்காட்டி உள்ளார். காதல் அக்கால முதல் இக்காலம் வரை வேறுபடுகின்ற நிலை பற்றியும் அறிவியல் மற்றும் விஞ்ஞானத்தின் வளர்ச்சியைப் பற்றியும் இளைஞர்களுக்கு நம்பிக்கை ஊட்டும் வகையில் கவி புனைந்து பாடுவதில் வல்லவர்.

**ஆய்விற்கு பயன்பட்ட நூல்கள்:**


1. இலக்கியத் திறனாய்வியல், தா.ஏ ஞானமூர்த்தி, ஐந்திணை பதிப்பகம், திருவல்லிக்கேணி,சென்னை- 5, முதல் பதிப்பு -1996.
2. இலக்கியச்சுவை, பா.ஜீவானந்தம், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி. லிமிடெட்) சென்னை - 98, மூன்றாம் பதிப்பு -1992.
3. வைரமுத்து கவிதைகள், லோகநாதன். ப, புதுக்கவிதை ஆராய்ச்சி, 5- கிரீன் பீல்ட், ஊட்டி, முதல் பதிப்பு -1998.
4. சிற்பியே உன்னை செதுக்குகிறேன், சூர்யா வெளியீடு, பிரஸ்ட்புரம், சென்னை - 24 ,10 ஆம் பதிப்பு - 2004
5. சிகரங்களை நோக்கி, சூர்யா வெளியீடு டிரஸ்டி புரம், சென்னை -24 ,10 ஆம் பதிப்பு -2004
6. இதுவரை நான், பாரதி பதிப்பகம், தி நகர், சென்னை- 17 இரண்டாம் பதிப்பு 1984.



நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி / Author Contribution Statement: இல்லை/NIL

கட்டுரையாளர் நன்றியுரை / Author Acknowledgement: இல்லை/NIL

கட்டுரையாளர் உறுதிமொழி / Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன் I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work



**உரிமம்**

இந்த ஆக்கம், கிரியேட்டிவ் காமன்சு அட்ரிபியூசன் 4.0 சர்வதேச உரிமத்தின் கீழ் உரிமம் பெற்றுள்ளது.

KALANJIYAM